ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2018.12.28 |

## நாணயக் கொள்கை மீளாய்வு: இல.8 - 2018

**இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2018 திசெம்பர் 27இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் கொள்கை வட்டி வீதங்களை அதன் தற்போதைய மட்டங்களிலேயே பேணுவதெனத் தீர்மானித்துள்ளது. அதன்படி மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வீதம் என்பன முறையே 8.00 சதவீதமாகவும் 9.00 சதவீதமாகவும் காணப்படும். பொருளாதாரமானது அதன் உள்ளார்ந்த வளர்ச்சியை அடைந்து கொள்வதனை இயலுமைப்படுத்தும் வகையில் நடுத்தர காலத்தில் பணவீக்கத்தை நடு ஒற்றை இலக்க மட்டங்களில் உறுதிப்படுத்துகின்ற பரந்த நோக்குடன் உள்நாட்டு பொருளாதாரம் மற்றும் உள்நாட்டு நிதியியல் சந்தை என்பனவற்றின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளையும் அதேபோன்று வெளிநாட்டுப் பொருளாதாரச் சூழலினையும் நாணயச் சபையானது கவனத்திற் கொண்டுள்ளது.**

### 2018இன் மூன்றாம் காலாண்டிலும் சராசரிக்குக் குறைவான பொருளாதார வளர்ச்சி தொடர்ந்தும் காணப்பட்டது

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளுக்கிணங்க இலங்கைப் பொருளாதாரமானது 2018இன் இரண்டாம் காலாண்டின் திருத்தப்பட்ட வளர்ச்சியான 3.6 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2018இன் மூன்றாம் காலாண்டில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 2.9 சதவீத மிதமான உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்துள்ளது. கிடைக்கக்கூடியதாகவுள்ள பொருளாதாரக் குறிகாட்டிகள் மற்றும் ஏனைய பொருளாதார அபிவிருத்திகளுக்கிணங்க உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சியானது 2019இல் படிப்படியாக உயர்வடைவதற்கு முன்பு 2018இன் நான்காம் காலாண்டிலும் குறைவாகவே இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்ச்சியாகக் குறைவடைந்துவரும் பொருளாதார வளர்ச்சியானது பரந்த அடிப்படையிலான அமைப்பியல் சீர்திருத்தங்களை மேலும் தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையை மீளவலியுறுத்துகின்றது.

**உயர்வான சந்தை வட்டி வீதங்கள் மற்றும் ரூபாய்த் திரவத்தன்மைப் பற்றாக்குறை இருந்த போதிலும் தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி உயர்வடைந்துள்ளது**

கடந்த நாணயக் கொள்கை மீளாய்வில் 2018 நவெம்பரில் நியதி ஒதுக்கு விகிதத்தில் மேற்கொள்ளப்பட்ட குறைப்பானது வங்கித்தொழில் முறைமைக்கு ஏறத்தாழ ரூ.90 பில்லியன் அளவான ரூபா திரவத்தன்மையை விடுவித்தது. எனினும், அதன் பின்னர் திரவத்தன்மைப் பற்றாக்குறை பரந்துபட்டுக் காணப்பட்டதுடன் மத்திய வங்கியானது திரவத்தன்மையை முகாமை செய்வதற்காக ஓரிரவு, குறுங்கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் பொருத்தமான முறையில் அதன் திறந்த சந்தை நடவடிக்கைகளை முன்னெச்சரிக்கையுடன் தொடர்ந்தும் மேற்கொண்டது. அதிகமான கொடுகடன் வளர்ச்சி மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகளால் பணச் சந்தையின் ஓரிரவு வட்டி வீதங்கள் கொள்கை வீத வீச்சின் உயர் எல்லைக்கு அண்மையில் பேணப்பட்டுள்ளன. ஏனைய சந்தை வட்டி வீதங்கள் பெயரளவு மற்றும் உண்மை நியதிகள் ஆகிய இரண்டின் அடிப்படையிலும் உயர்வான மட்டங்களிலேயே தொடர்ந்தும் காணப்பட்டன.

மிதமிஞ்சிய இறக்குமதி வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கான அரசினதும் மத்திய வங்கியினதும் வழிமுறைகளின் எதிர்பார்ப்புடன் தனியார் துறை அதன் செயற்பாடுகளை முன்னீடு செய்தமையை பகுதியளவில் பிரதிபலித்து அதிகரித்த நிதியிடல் கிரயம் மற்றும் இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளுக்கு மத்தியிலும் தனியார் துறைக்கான கொடுகடனின் ஆண்டுக்காண்டு வளர்ச்சியானது 2018 செத்தெம்பரிலிருந்து உயர்வடைந்துள்ளது. இருந்தபோதிலும் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் சுருக்கத்தினால் விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டுக்காண்டு வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களுக்குள்ளேயே காணப்பட்டுள்ளது.

**குறுகிய காலத்தில் பணவீக்கத்திற்கான சாதகமான தோற்றப்பாடு**

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகிய இரண்டின் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் குறைந்த ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. மையப் பணவீக்கமும் 2018இன் இது வரையான காலப்பகுதி வரைக்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. எரிபொருள் விலைகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக ரீதியில் தீர்மானிக்கப்பட்ட விலைகள் என்பவற்றின் மீது அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கீழ்நோக்கிய சீராக்கங்கள் அதேபோன்று சிறப்புப் பண்டங்கள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் தீர்வைகள் மீதான குறைப்புக்கள் என்பவற்றுடன் இணைந்து வேளாண்மைத் துறையின் தற்போதைய மீட்சி என்பன குறுகிய காலத்தில் பணவீக்கத்தின் மீது சாதகமான தாக்கத்தினைச் செலுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. தளம்பலடையும் உலகளாவிய பண்ட விலைகள், எதிர்வுகூற முடியாத வானிலை நிலைமைகளின் காரணமாக உள்நாட்டு வழங்கல் சங்கிலிகளுக்கு ஏற்படக்கூடிய சாத்தியமான வானிலையுடன் தொடர்புடைய குழப்பங்கள் மற்றும் அண்மைய மாதங்களில் ஏற்பட்ட ரூபா தேய்மானத்தின் உள்நாட்டு விலைகள் மீதான தாக்கத்தின் சாத்தியமான ஊடுகடத்தல்கள் என்பன பணவீக்கத் தோற்றப்பாடு மீதான இடர்நேர்வுகளை கொண்டிருக்கும். தற்போதைய எறிவுகள் பணவீக்கமானது 2019இல் சராசரியாக 5 சதவீதத்திற்குக் கீழ் காணப்படுமென்பதுடன் அதன் பின்னர் பொருத்தமான கொள்கைச் சீராக்கங்களுடன் 4 – 6 சதவீத வீச்சுக்குள் நிலைப்படுத்தப்படுமென காட்டுகின்றன.

**வெளிநாட்டுத் துறையானது பன்னாட்டு மற்றும் உள்நாட்டுச் சிக்கல்களுக்குத் தொடர்ந்தும் முகங்கொடுத்து வருகின்றது**

ஏற்றுமதி வருவாய்களின் வளர்ச்சியை விஞ்சிய இறக்குமதிச் செலவினத்தின் விரிவாக்கத்துடன் 2018இன் முதல் பத்து மாதங்களில் வர்த்தகப் பற்றாக்குறையானது மேலும் விரிவடைந்துள்ளது. எனினும், மோட்டார் வாகனங்கள் மற்றும் முக்கியமல்லாத பண்டங்களின் இறக்குமதி என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட

வழிமுறைகள் அதேபோன்று ரூபா தேய்மானத்தின் தாக்கம் என்பவற்றிற்குப் பதிலிறுத்தும் வகையில் இறக்குமதிச் செலவினத்தில் மிதமடைவொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து வருகின்ற அதேவேளையில் தொழிலாளர் பணவனுப்பல்களில் மெதுவடைவொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. நிதியியல் கணக்கில் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை இரண்டிலும் திசெம்பரில் சிறிதளவான உட்பாய்ச்சல்கள் அவதானிக்கப்பட்டுள்ள போதிலும் வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல்களையே அனுபவித்துள்ளன. விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறை, உலகளாவிய சந்தைகளில் நிலவுகின்ற இறுக்கமான நிலைமைகள் மற்றும் உள்நாட்டுச் சந்தையில் மிதமிஞ்சிய ஊக நடவடிக்கைகள் செலாவணி வீதத்தின் மீது அழுத்தங்களைத் தோற்றுவித்ததுடன் 2018இன் திசெம்பர் 27 வரையான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கையின் ரூபாவானது 15.9 சதவீதத்தால் தேய்வடைந்துள்ளது. அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018இன் நவெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 7.0 பில்லியனுக்கு வகைகூறியுள்ளதுடன் இது 3.7 மாத இறக்குமதிகளுக்குச் சமமான பெறுமதியை வழங்குகின்றது.

**கொள்கை வட்டி வீதங்கள் தற்போதைய மட்டங்களிலேயே பேணப்பட்டுள்ளன**

தொடர்ந்தும் குறைவாக விளங்கிய பணவீக்கம் மற்றும் உள்ளார்ந்த மட்டங்களுக்குக் கீழாக விளங்கிய பொருளாதார வளர்ச்சி என்பவற்றிற்கிடையிலும் தனியார் துறைக்கான கொடுகடனின் உயர்வு அதேபோன்று வெளிநாட்டு ஒதுக்குகளின் மீதான தொடர்ச்சியான அழுத்தங்கள் காணப்படுகின்ற சூழலில் ஒட்டுமொத்தப் பொருளாதார நிலைமைகள் மற்றும் உள்நாட்டு நிதியியல் சந்தைகளை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கியின் நாணயச் சபையானது தற்போதைய நாணயக் கொள்கை நிலைப்பாடு பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டிருந்தது. அதன்படி நாணயச் சபையானது மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் அதன் தற்போதைய மட்டங்களிலேயே பேணுவதெனத் தீர்மானித்துள்ளது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்:** | **கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 8.00% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 9.00% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 6.00% |

**தகவல் குறிப்பு:**

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2019 பெப்புருவரி 22ஆம் நாள் வெளியிடப்படும்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களால் *வழிகாட்டல்: 2019 மற்றும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்* 2019 சனவரி 02 முற்பகல் 10.00 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் அறிவிக்கப்படும். இந்த வழிகாட்டல் தொடர்பான அறிவிப்பினைத் தொடர்ந்து பத்திரிகை மாநாடு ஒன்று இடம்பெறும்.

**தரவு இணைப்புக்கள்:**

## அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (தற்காலிகமானவை)

| பொருளாதார நடவடிக்கைகள் | ஆண்டிற்கு ஆண்டு% மாற்றம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **2016** | **2017** | | | | | **2018** | | |
| | வருடாந்தம் | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | வருடாந்தம் | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு |
| வேளாண்மை | **-3.8** | -4.4 | -3.1 | -3.0 | 7.1 | **-0.8** | 5.6 | 4.2 | 3.3 |
| கைத்தொழில்கள் | **5.8** | 3.7 | 5.6 | 5.3 | 4.1 | **4.6** | 1.2 | 2.3 | 1.9 |
| பணிகள் | **4.7** | 4.3 | 2.7 | 2.8 | 3.2 | **3.2** | 4.6 | 4.6 | 3.9 |
| மொ.உ.உற்பத்தி | **4.5** | **3.4** | **3.0** | **3.2** | **3.5** | **3.3** | **3.4** | **3.6** | **2.9** |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 02: பணவீக்கம்

| மாதம் | | மாச் 18 | யூன் 18 | யூலை 18 | ஓகத் 18 | செத் 18 | ஒத் 18 | நவெ 18 |
|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 4.2 | 4.4 | 5.4 | 5.9 | 4.3 | 3.1 | 3.3 |
| | தேநுவிசு(2013=100) | 2.8 | 2.5 | 3.4 | 2.5 | 0.9 | 0.1 | 1.0 |
| மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 3.4 | 3.4 | 3.9 | 3.7 | 3.8 | 3.8 | 3.4 |
| | தேநுவிசு(2013=100) | 1.9 | 1.8 | 2.3 | 2.7 | 3.1 | 3.4 | 3.1 |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 03: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாச் 18 | யூன் 18 | செத் 18 | ஒத் 18 | நவெ 18 | மாச் 18 | யூன் 18 | செத் 18 | ஒத் 18 | நவெ 18 |
| ஒதுக்குப் பணம் | 997 | 999 | 1,011 | 998 | 942 | 11.8 | 12.0 | 11.2 | 9.1 | 3.3 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 6,607 | 6,748 | 6,933 | 6,988 | 7,043 | 16.4 | 14.9 | 13.1 | 13.5 | 13.9 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 106 | 101 | 8 | (17) | (43) | 128.6 | 141.1 | (27.0) | (145.5) | (163.9) |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 6,500 | 6,646 | 6,926 | 7,005 | 7,086 | 7.5 | 8.6 | 13.1 | 14.4 | 15.8 |
| அரசாங்கததிற்கான தேறிய கொடுகடன் | 2,278 | 2,273 | 2,427 | 2,422 | 2,464 | 2.9 | 1.7 | 9.2 | 9.2 | 14.0 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 557 | 619 | 656 | 701 | 715 | (2.6) | 8.5 | 27.1 | 40.9 | 41.7 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 5,022 | 5,156 | 5,356 | 5,430 | 5,509 | 15.3 | 14.9 | 15.4 | 16.1 | 16.2 |
| விரிந்த பணம் ($M_4$) | 8,112 | 8,292 | 8,502 | 8,555 | 8,615 | 16.7 | 14.8 | 12.5 | 12.5 | 12.5 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 04: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | மாச்சு 18 முடிவில் | யூன் 18 முடிவில் | செத் 18 முடிவில் | ஒத் 18 முடிவில் | நவெ 18 முடிவில் | 27 திசெ. 18 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 8.00 | 8.00 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.75 | 8.50 | 8.50 | 8.50 | 9.00 | 9.00 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 8.41 | 8.50 | 8.40 | 8.44 | 8.96 | 9.00 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | |
| 91-நாள் | 8.17 | 8.32 | 8.56 | 9.48 | 10.01 | - |
| 182-நாள் | - | 8.85 | - | 9.75 | 9.99 | 9.99 |
| 364-நாள் | 9.69 | 9.39 | 9.51 | 10.39 | 11.20 | 11.20 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 11.55 | 11.33 | 11.74 | 12.25 | 12.03 | 11.93 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 14.04 | 14.05 | 14.27 | 14.36 | 14.50 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.25 | 13.94 | 14.22 | 14.32 | 14.51 | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 9.00 | 8.92 | 8.69 | 8.73 | 8.77 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 11.41 | 11.26 | 10.84 | 10.78 | 10.81 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 10.33 | 10.57 | 9.72 | 10.09 | 10.38 | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*